**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093852

1. District : மாவட்டம் VELLORE PS: காவல்நிலையம் VIGILANCE AND ANTI CORRUPTION Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 12/2018 Date: நாள் 12-12-2018
2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 of PC (Amendment)
   (iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: Act 2018.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 20-11-18 Date to : நாள் வரை 10-12-2018
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.12.2018 Time : நேரம் 0800 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL - II Time : நேரம் 12.12.2018 at 0800 Hrs.
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typewritten Complaint.
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Vaniyambadi 67 kms. West.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T. Gopalakrishnan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Thangaraj
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 31 yrs (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Farmer. (g) Address : முகவரி Kollakottai, Kothakottai Village, Vaniyambadi Taluk, Vellore District.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Ashok, Surveyor, Vaniyambadi taluk office Vellore district.
8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 12/12/18
T. Gopalkrishnan

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 12/12/18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12/12/18 at 10.30 HRS.

Name: பெயர் T. VIJAYALAKSHMI
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண் .........
VE&AC, Vellore

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:-</u> வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் P.விஜயலட்சுமி ஆகிய நான் 12.12.2018-ம்தேதி காலை 08.00 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, புகார்தாரர் திரு.த.கோபாலகிருஷ்ணன், வயது.31, த/பெ.தங்கராஜ், கொல்லகொட்டாய், கொத்தக்கோட்டை கிராமம் மற்றும் அஞ்சல், வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று, முதற்கட்ட விசாரணையில் என்னுடைய தகவலாளர்களை தொடர்பு கொண்டு எதிரியின் நடத்தை குறித்து விசாரணை செய்ததில் எதிரியானவர், அவரது எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பொதுமக்களிடமிருந்து லஞ்சமாக பணம் பெறுவது உறுதி செய்யப்பட்டது. மேலும் புகார்தாரரின் நம்பகத்தன்மை மற்றும் எதிரியின் நடத்தை குறித்து விசாரணை செய்து, திரு.அசோக், ஆலங்காயம் பிரிவு சர்வேயர், வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் மீது 7 of P.C. (Amendment) Act 2018 -ன் கீழ் வழக்கு பதிவுச் செய்ய தகுந்த முகாந்திரம் இருந்தமையால், சென்னை இயக்குநரக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அனுமதிப் பெற்று, திரு.த.கோபாலகிருஷ்ணன் என்பவர் கொடுத்த புகார் மனுவின் பேரில், இன்று 12.12.2018-ம் தேதி 09.45 மணிக்கு வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2018 சட்ட பிரிவு 7 of P.C. (Amendment) Act 2018-ன் கீழ் திரு.அசோக், ஆலங்காயம் பிரிவு சர்வேயர், வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரர் கொடுத்த புகார் வாக்குமூலம் விவரம் பின்வருமாறு: அனுப்புனர் த.கோபால கிருஷ்ணன் வயது.31, த/பெ.தங்கராஜ், கொல்லகொட்டாய், கொத்தகோட்டை கிராமம் மற்றும் அஞ்சல், வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், வேலூர் லஞ்ச ஒழிப்பு துறை, வேலூர். ஐயா, என் பெயர் கோபால கிருஷ்ணன் நான் டிப்ளமோ சிவில் இன்ஜினியரிங் படித்துள்ளேன் என் அப்பா தங்கராஜ் என் அம்மா பெயர் முனியம்மாள் என்கூட பிறந்தவர் தம்பி தேவராஜ் ஐ.டி.ஐ படித்துவிட்டு கார் மெக்கானிக்கா வாணியம்பாடியில் வேலை செய்து வருகிறார். என் அப்பா பெயரில் சுமார் 3 ஏக்கர் விவசாய நிலம் வாணியம்பாடி தாலுக்கா கொத்தகோட்டை கிராமத்தில் உள்ள நக்கனா மலை அடிவாரத்தில் உள்ளது, நானும் என் அப்பா தங்கராஜ் அதில் விவசாய வேலை செய்து வருகிறோம். இதில் சுமார் 2 ஏக்கர் விவசாய நிலத்திற்கான பட்டா என் அப்பா பெயரில் உள்ளது அது பூர்வீக சொத்து. என் அப்பா சம்பாதித்து வாங்கிய சுமார் 19 சென்ட் நிலம் மற்றும் 62 சென்ட் நிலத்திற்கான பட்டா என் அப்பா தங்கராஜ் பெயரில் பெறுவதற்காக நான் கடந்த 04-04-2018 அன்று வாணியம்பாடி தாலுக்கா ஆபீசில் உள்ள இ-சேவை

மையத்தில் பணம் ரூ.60/- செலுத்தி எங்கள் சொத்திற்கான சர்வே எண்கள்.12/1B, 10-க்கு உட்பிரிவுகள் சர்வேயர் மூலம் அளக்க வேண்டி ஆன்லைனில் மனு பதிவு செய்தேன் அதனுடைய ஒப்புகை சீட்டு எண்.18004251333 ஆகும், நான் ஆன்லைனில் மனு பதிவு செய்தபோது எங்களுடைய சொத்திற்கான பத்திரங்களின் நகல்கள் கொடுத்தேன். சுமார் 8 மாதங்கள் கடந்தும் எனக்கு எந்த பதிலும் வராத காரணத்தால் கடந்த நவம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் நான் வாணியம்பாடி தாலுக்கா அலுவலகம் சென்று எங்களுடைய சொத்தினை உட்பிரிவு செய்து அளந்து கொடுக்க ஆன்லைனில் பதிவு செய்தும் அளக்கவில்லை என்று சர்வேயர் அவர்களை பார்க்க சென்றேன் அப்போது அங்கிருந்தவர்களில் ஒருவர் நீ எந்த ஊர் என்று கேட்டார் அதற்கு நான் கொத்தகோட்டை என்று சொன்னதற்கு அந்த நபர் அசோக் என்பவர் தான் உங்கள் ஏரியாவுக்கு சர்வேயர் அவரிடம் பேசிக்கொள் என்று சொன்னார் அதன் பின்னர் செவ்வாய்கிழமை 20-11-2018 அன்று வாணியம்பாடி தாலுக்கா ஆபீசில் இருந்து சர்வேயர் பேசுவதாக சொல்லி ஒரு நபர் பேசினார் அவர் பெயர் அசோக் என்று சொன்னார் அளக்க வேண்டிய எங்களுடைய இடத்தின் அசல் பத்திரங்களை தயராக எடுத்து வைத்துக்கொள்ளும்படி சொன்னார் பின்னர் மீண்டும் எனக்கு போன் செய்து கொத்தகோட்டை மணியக்காரர் ஆபீசிற்கு வரச்சொன்னார் நான் உடனே மணியக்காரர் ஆபீஸ் சென்றேன் அங்கு திரு.அசோக் என்ற சர்வேயர் ஆலங்காயம் பகுதிக்கு உட்பட்ட எங்களுடைய நிலத்தை அளந்து கொடுக்க வந்திருந்தார், அவர் உன்னுடைய இரண்டு சர்வே எண்ணையும் அளக்க வேண்டும் ஒரு சர்வே எண்ணுக்கு ரூ.5,000/- நீ கொடுக்க வேண்டும் ஆக மொத்தம் ரூ.10,000/- செலவாகும் என்றார் அதற்கு நான் சார் எதற்கு அவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் பீஸ் என்ன கட்டவேண்டுமோ அதை மட்டும் கட்டிவிடுகிறேன் என்று சொன்னேன். அதற்கு சர்வேயர் திரு.அசோக் பீஸ் கட்டினால் மட்டும் உன் வேலை முடியாது ரூ.10,000/- கொடுத்தால் தான் நான் சப்டிவிஷன் செய்து கொடுப்பேன் நான் வேலைகளை முடித்து எட்சர்வேயர் அவர்களுக்கு பேப்பரை அனுப்பினால் தான் உனக்கு பட்டா கிடைக்கும் என்றார். அதற்கு நான் சார் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை பீஸ் மட்டும் வாங்கி கொள்ளுங்கள் என்றேன் செலவுக்கு பணம் கொடுத்தால் தான் வேலையாகும் இல்லை என்றால் நீ பீஸ்கூட கட்டமுடியாது பட்டா கிடைக்காது நீ கொடுக்கும் பணம் எனக்கு மட்டும் இல்லை நான் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்று கண்டிப்புடன் சொல்லிவிட்டார். அதற்கு நான் அமைதியாக இருந்துவிட்டேன் மேற்கொண்டு என்னால் எதுவும் பேசமுடியவில்லை. அசோக் சர்வேயரை என்னுடைய டூவீலரிலேயே ஏற்றிக்கொண்டு எங்கள் நிலத்திற்கு சென்றோம், எங்களுடன் சிப்பந்தியும் வந்தார் அசோக் சர்வேயர்

எங்கள் நிலத்தை அளந்தார் அவருக்கு உதவியாக நான், என்னுடைய மாமா ஏழுமலை மற்றும் எங்கள் ஊர் சிப்பந்தி உதவியாக இருந்து டேப் பிடித்து அளக்க உதவினோம். நிலத்தை அளந்து முடித்த பின்னர் ரூ.10,000/- லஞ்சமாக கொடுத்தால் மட்டும் தான் உங்க அப்பா பெயரில் பட்டா கிடைக்கும் நான் நிலத்தை அளந்தால் மட்டும் உன் வேலை முடியாது உன் பேப்பரை எட்சர்வேயருக்கு அனுப்பி அவர் கையெழுத்துபோடனும் அதன் பிறகு நிறைய வேலை உள்ளது. பணம் எப்பொழுது கொடுக்கறியோ அப்போது தான் ட்ராயிங்க எல்லாம் நான் ரெடி செய்து கையெழுத்துபோட்டு அனுப்புவேன் என்றார். அதன் பின்னர் கடந்த 10.12.2018 அன்று சர்வேயர் அசோக் அவர்களை நிம்மியம்பட்டில் சந்தித்து என்னுடைய பேப்பர் சம்மந்தமாக கேட்டேன் அதற்கு அவர் ரூ.10,000/- பணம் இல்லாமல் வெறும் கையுடன் வந்தால் ஒன்றும் செய்யமுடியாது என்றார் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னதற்கு ரூ.4,500/- ஒரு சர்வே நம்பரை அளந்ததற்கு கொடு உங்களுடையது மொத்தம் இரண்டு சர்வே நம்பர் ஆக மொத்தம் ரூ.9,000/- கொடுத்தால் நான் என்னுடைய வேலையை முடித்து டிராயிங் போட்டு எட்சர்வேயருக்கு உன் பேப்பரை அனுப்பிவைப்பேன் என்றார் நீ பணம் ரெடி செய்து என்னிடம் பணத்தை கொடுத்துவிட்டு அதன் பின்னர் நீ வங்கியில் கட்ட வேண்டிய கவர்மென்ட் பீஸ் கட்டிவிட்டால் உடனடியாக உன் வேலையை முடித்து தருகிறேன் என்றார், அதற்கு சார் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை கொஞ்சம் பார்த்து செய்து கொடுங்கள் சொத்தில் எந்த விவகாரமும் இல்லை என்றேன் அதற்கு அவர் பணம் ரூ.9,000/- இருந்தால் வா இல்லை என்றால் சும்மா என்னை தொந்தரவு செய்யாதே உனக்காக நான் என் சம்பளத்தை போட்டு செலவு செய்யமுடியுமா போய் ரூ.9,000/- எடுத்துக்கொண்டு வந்து பேசு என்று கண்டிப்புடன் சொன்னார். திரு.அசோக் சர்வேயர் எங்கள் பகுதிக்கு உரியவர் எங்கள் நிலத்தை அளந்து உட்பிரிவு செய்து கொடுக்க அவர் லஞ்சமாக கேட்கும் பணம் ரூ.9,000/- கொடுத்து என்னுடைய சட்டப்படியான வேலையை முடித்துக்கொள்ள விருப்பம் இல்லாத காரணத்தால் என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.9,000/- கேட்ட திரு.அசோக் சர்வேயர், ஆலங்காயம் பகுதி, வாணியம்பாடி தாலுக்கா என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன், என்னுடைய புகார் மனுவுடன் பட்டா மாறுதல் வேண்டி ஆன்லைனில் கட்டிய அசல் ஒப்புகை சீட்டு இணைத்துள்ளேன். இப்படிக்கு ஒம்/- xxxxxxx, (T.Gopalakrishnan), 12/12/18

Sir,
Received the complaint from T. Gopalakrishnan, 31/18, S/o Thangaraj, Kollakottai, Kotthakottai Village, Vaniyambadi taluk, Vellore district on 12-12-2018 at 0800 hrs. After verifying Antecedents of accused and the credibility of the complainant by

conducting Preliminary Enquiry with the approval of superiors and concurrence from the DVAC registered a case in Vellore V&AC Cr.No.12/2018 u/s 7 of P.C (Amendment) Act 2018 on 12-12-2018 at 09.45 hrs. Sd/-xxxxx 12/12/18 (P.VIJAYALAKSHMI) Inspector of Police, V&AC, Vellore.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் மற்றும் பட்டா மாறுதல் வேண்டி ஆன்லைனில் கட்டிய அசல் ஒப்புகைசீட்டு ஆகியவற்றை கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, வேலூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிக் கொள்ளப்பட்டது.

**இணைப்பு:**

1. திரு.த.கோபாலகிருஷ்ணன், வயது.31, த/பெ.தங்கராஜ், கொல்லகொட்டாய், கொத்தக்கோட்டை கிராமம் மற்றும் அஞ்சல், வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவரின் புகார்.

2. பட்டா மாறுதல் வேண்டி ஆன்லைனில் கட்டிய அசல் ஒப்புகைசீட்டு

12/12/18

(P. VIJAYALAKSHMI)
Inspector of Police
V&AC, Vellore.